Koviloor Digital Library

உ

மணிவாசகர் மணிமொழிகள்

(தொகுப்பும் விளக்கமும்)



Kmm0932

அரியலூர் மணிவாசக மன்ற

இருபத்து இரண்டாம் ஆண்டு

நிறைவு விழா மலர்

Koviloor Digital Library

மணிவாசக மன்ற வெளியீடு எண்: 3.

Koyiloor Digital Library

3139

உ

சிவமயம்.

திருவருள் துணை.

திருச்சிற்றம்பலம்.

"தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி."

மணிவாசகர் மணிமொழிகள்.

(தொகுப்பும் விளக்கமும்)



'தமிழ்ப் பெரும்புலவர்'

திரு. அ. நடேச முதலியார் அவர்கள்,

எழுதியது.



மணிவாசக மன்றம்,

அரியலூர்.

4—9—1965

(அனைத்து உரிமையும் ஆசிரியர்க்கே)

Koviloor Digital Library



உ

திருவாதவூரர் அருள் வரலாறு.


1. செய்யதிரு வாதவூர் வந்தருளி
யமைச்சரெனச் சிறந்து நீடு
வையமிசை வழுதிநிதி கொண்டரனைக்
குருந்தடியில் வணங்கி ஞாலம்
உய்ய வருட் பணியாற்றி நரிபரியாச்
செய்துநதி யுடைப்பில் எங்கள்
ஐயன்முடி மிசையுவந்து மண்சுமக்க
அன்பினுரு வாயி னாரே.

2. எங்குமா கியவழகன் மேனிபிரம்
படிதாங்க ஏங்கிப் புத்தர்
மங்கவா ரருள்செய்து மூகைபே
சிடவழங்கி மணிமன் றாடும்
எங்கணா யகன்கரத்தால் ஏடுமெழித்
தாணியுங் கொண் டெழுதப்பாடி
அங்கண்மே வியசோதி தன்னிலிரண்
டறக்கூடி யமர்ந்திட் டாரே.

(புராண சாரம்)



Koviloor Digital Library



இந்நூல்

4, 5—9—1965 ஆவணி மூல நாட்களில் நடைபெறும்

மணிவாசக மன்ற

இருபத்து இரண்டாவது ஆண்டு

நிறைவு விழா மலராக

வெளியிடப்பட்டு

மன்றத்தினையும், ஏழையேங்களையும் தமது உடைமையாகவும்
அடிமைகளாகவும்
ஏற்றருளிக்காத்தருளும்
ஆசிரியர்

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர்
'தமிழ்ப் பெரும்புலவர்' 'சைவப் பெருநாவலர்' 'புலவர் சிகாமணி'

உயர்திரு. அ. நடேச முதலியார் அவர்கள்

பெருங்கருணையினைப் போற்றி வணங்குதற்கு அடையாளமாக அவர்கள் திருப்பாதப் போதுகளில் பணிந்து சமர்ப்பித்துக் கொள்ளப்படுகிறது.

அரியலூர்
4—9—65

இங்ஙனம்
மாணவச் சிறுவர்கள்.



Koviloor Digital Library

முதற் பதிப்பு



ஜனோபகார (மின்) அச்சகம்,
அரியலூர்.

Koviloor Digital Library

உ

திருவருள் துணை.



முன்னுரை........

திருச்சிற்றம்பலம்.

அழிவு இன்றி நின்றது ஓர் ஆனந்த
வெள்ளத்திடை அழுத்திக்
கழிவு இல் கருணையைக் காட்டிக்,
கடிய வினை அகற்றிப்,
பழ மலம் பற்று அறுத்து. ஆண்டவன்,
பாண்டிப் பெரும் பதமே,
முழுது உலகம் தருவான்; – கொடையே
சென்று முந்து மினே.

திருசசிற்றம்பலம்.

அரியலூர் மணிவாசக மன்றம் பல்லாண்டுகளாக சமயத்தோண்டும் தமிழ்த் தோண்டும் சேவ்வனே செய்து வருகின்றது. மன்றத்தின் தோண்டு பல வழிகளில் பயன்பட வேண்டும். மக்களுக்கு அறிவும்அன்பும் துணையாக வளர்ச்சிக் குரியதாய் அமைய வேண்டும். அறிவு வளர்ச்சி மோழித்துணை கோள்வது. அன்பு வளர்ச்சி சமயத்துணை கோள்வது. அறிவின் பயனே அன்பின் பேருக்குதான். அந்த அன்பு இறை அன்பாய் மலர வேண்டும். அன்புக்கு எல்லை, அன்பின் வளர்ச்சிக்கு எல்லை, அன்பைப் பேறுவதற்கு எல்லை மாணிக்க வாசகர் அருளிய திருவாசகம் என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்த கருத்து.

Koviloor Digital Library

மன்றத் தொடர்பு கொண்ட நான்: மன்றத்தின் பெயருக்கேற்ப மணிவாசகத்தில் நீண்டநாள் பழக்கம் உடையேனுகையால் அத் திருவாசகத் தினின்றும், அனைத்துமே அருமைப்பாடு உடையன ஆயினும், உயரிய எண்ணங்களை, — அனுபவங்களைத் தன்னகத்துக் கொண்ட சில பகுதிகளை மன்றத்தின் மூலமாக வெளியிடுவதும், அப்பகுதி கட்குக் கருத்துரை வழங்கு வதும் மக்கட்கு நலம் பயக்கும், அன்பை வளர்க்கும், சமயப் பற்றை உண்டாக்கும், திருவாசகத்தில் ஈடு பாட்டினைப் பெருக்கும், மேலும் தொண்டினை வளர்க்கும் மன்றத்தின் தொண்டு நிலைக்கும் என்ற எண்ணத் தோடு இதனை எழுதினேன். இது வெளிவரலாயிற்று.

அன்பர்கள் இவ்வரிய வெளியீட்டினைப் பெற்று மன்றத்திற்கு உறு துணையாக நின்று, சமய எண்ணங்களில் அழுத்தமும், பற்றும், அனுபவமும் பெற வேண்டும் என்பது எளியேன் வேண்டுகோள். மன்ற வளர்ச்சி, சமய மொழி வளர்ச்சி யாகையால், மன்றத்தினரும், பயன் கருதாத் தொண்டுகள் பல செய்து பிறவிப் பயனையடைய வேண்டும் என்று எல்லாம் வல்ல முழு முதற்பொருளை வழுத்துகிறேன்.

இங்ஙனம

அன்பன்,

அ. நடேச முதலியார்



Koviloor Digital Library

உ



நன்றி உரை......

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய திருவாதவூரடிகள் சைவ சமய குரவர் நால்வருள் ஒருவர். ‘‘மாணிக்கவாசகர்’’ என்ற இத்திருநாமம் இறைவன், திருப்பெருந்துறையில் குருந்தின்கீழ் இருந்து இவரை ஆட்கொண்டபோது சூட்டியருளியதாகும். மாணிக்க வாசகர் – ***மணிவாசகர்***, அருள்செய்தவை திருவாசகம் – மணிவாசகம் ***மணி மொழிகள்***, திருக்கோவையார் என்ற நூல்கள், சுவாமிகள் சிதம்பரத்தில் தங்கியிருந்த சமயம் சிவபெருமான் தாமே ஓர் அந்தனராக வந்து கேட்டு அவைகளை ஓலைச்சுவடிகளில் எழுதி ‘அழகிய சிற்றம்பல முடையார் எழுதியது’ என்று கைச்சாத்திட்டுப் பொன்னம்பலப் படியில் வைத்தருளினர். மறுநாள் இது அறிந்தோர் சுவாமிகளிடம் சென்று அவர்களை அழைத்து வந்து, ‘‘தாங்களே இவைகளின் பொருள்களை விளக்கஞ் செய்ய வேண்டும்’’ என்று வேண்டுதலும் சுவாமிகள், ‘‘பொருள் ஸ்ரீ நடராஜ மூர்த்தியே’’ என்று அருள் செய்து மறைந்தார்கள்.

இன்று ஆவணி மூல நன்னுள், இந்நாளில்தான் இறைவன் மாணிக்க வாசகர்க்காகக் குதிரைகள் கொண்டு சென்ருா. இவ்வருட் பெருக்கத் திருநாளில் நடைபெறும் மணிவாசக மன்ற 22வது ஆண்டு நிறைவு விழாவில் திருவாசகப் பொருளாம் ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் ஈசர் பெயர்தாங்கியவர்களும், எங்கள் ஆசிரியரும், ஏழையேங்களையும் மன்றத்தினையும் ஆட்கொண்ட குருதேவரும் ஆகிய திரு. அ. நடேச முதலியார் அவர்கள் எழுதிய ‘‘மணிவாசகர் மணிமொழிகள்’’ (தொகுப்பும் விளக்கமும்) என்ற நூல் மணிவாசக மன்ற 3வது வெளியீடாக வெளிவருவது எல்லா வகையாலும் பொருத்தமும் சிறப்பும் உடையதே,

Koviloor Digital Library

50 மணி மொழிகளுக்குப் பொன்னே போல் போற்றத்தக்க 50 விளக்கங்கள் அருள் செய்திருக்கின்றார்கள். அவைகள் சொற்சுருக்கத்தை உடையனவாகவும், பொருட் பெருக்கத்திற்கு உரியனவாகவும் இருந்து, சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிந்து இன்புறுத்தி இம்மை மறுமைப் பெரும்பயன் அளிக்கும் என்பதை அவைகளைப் படித்தறிவோர் நன்கு உணர்வார்கள். இவ்வாறு மன்றத்தையும், மற்றையோரையும் பல வகையாலும் பாதுகாத்து உய்வித்துவரும் திரு. முதலியார் ஐயா அவர்களுடைய பொன்னார் திருவடிகளுக்கு ஏழையேங்களுடைய மனம் நிறை நன்றியையும் வணக்கங்களையும் உரிமைபடுத்துகின்றோம். நன்முறையில் அச்சிடும் ஜனோபகார (மின்) அச்சகத்தினர்க்கும் எங்களுடைய உளங் கனிந்த நன்றியும் வணக்கங்களும் என்றுமே உரியன.

எல்லோருக்கும் மேலும் நலமெலாம் தந்தருளுமாறு குருந்த மேவிய பெருந்தகையாருடைய திருந்தடிகளை வணங்குகின்றோம்.

"புகழ்மின் றொழுமின் பூப்புனைமின் புயங்கன் றாளே புந்தி வைத்திட்
டிகழ்மி னெல்லா வல்லலையு மினியோ ரிடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச் சென்று சிவன்றாள் வணங்கிநாம்
நிகழு மடியார் முன்சென்று நெஞ்ச முருகி நிற்போமே

(திருவாசகம்)

"கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!"

அரியலூர்
4—9—65.

இங்ஙனம்
மாணவச் சிறுவர்கள்.

Koviloor Digital Library

உ

மணிவாசகர் மணிமொழிகள்,

(தொகுப்பும் விளக்கமும்)

1 "நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க"

உலகத்தில் மக்களாய்ப் பிறந்த நாம் அடைய வேண்டிய குறிக்கோள் இன்பமாகும். நிலைத்த இன்பத்தினை நாமே யறிந்து அடையமுடியாது. ஆகையால், இறைவன் கருணையினால், நமக்குக் குருவாய் எழுந்தருளி வருகிறான். அவனை அடைவதற்குரிய சாதனமாகிய ஐந்தெழுத்தினை உபதேசிக்கிறான், அதனைநாமறிந்து கடைப்பிடிப்பதன் மூலம், நம் உள்ளத்தில், அவன் இமையளவு நேரமும் பிரியாது எப்போதும் விளங்கும் இயல்பினைக் காட்டிக் கொண்டிருக்கிறான். இதனை நாமறிந்த வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும்.

2 "வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க"

நமக்கு உலகத்தில் எத்தனையோ ஆசைகள் வளர்ந்து கொண்டே வருகின்றன. அவற்றை நம்மால் அடைய முடிவதில்லை. முடிவில், மனிதன், ஆசைநிறைவேறாமலேயே இறந்து போகிறான். இந்த ஆசைகள் உண்மையில் நமக்குத் தீமைகளையே செய்கின்றன. இறைவன் திருவருள் கூடுமானால் ஆசைகள் குறையும், அமைதி உண்டாகும், உண்மையான நேசமும், பிறர்க்குதவி செய்யும் பண்பாடும் தோன்றும். இந்த நிலைபெற நாம் தெய்வசிந்தனை உடையவர்களாக வேண்டும்.

3 "நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி"

நாம் பெற்றுள்ள இந்த மனிதப்பிறவி பெறற்கரிய வாய்ப்பாகும். அதனைப் பொய்யான வாழ்க்கையால் பாழாக்கிவிடக்

Koviloor Digital Library

கூடாது. இந்தப் பொய்வாழ்வைப் போக்கி மெய்வாழ்வு பெற அன்பு வளரவேண்டும். அன்பு எவ்வளவு எவ்வளவு வளர்கிறதோ அந்த அளவுக்கு வாழ்வு மலர்கிறது. அன்பின் முதிர்ச்சியில் அன்பு உள்ளத்தில் இறைவன் இன்ப வடிவாய்த் தோன்றுகிறுன் அன்பே இறைவன் வடிவம்.

4 ''எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்''

மரம் செடி கொடி முதல் மக்கள் ஈருக உயிர்கள் பல பிறவிகளில் வளர்ந்து வருகின்றன. பிறப்பானது அறிவு வளர்ச்சிக்கும் அன்பின் எழுச்சிக்கும் துணை செய்வது. இறுதியில் 'இறைவனுடைய திருவடிப் பேற்றை அடைவதற்குப் பிறவியே சாதனம். அதனுல்தான் பிறப்பு வேண்டும் என்றும் பேசப்படும். இலட்சியத்தை அடைந்தவனுக்குப் பிறப்பு வேண்டாமென்றும் கருதப்படும். நாம் இறைவனுடைய பொன்னடிகளை இந்தப்பிறப்பிலேயே கண்டு கொள்வோமானல் இனிவரும் துன்பப் பிறவிகள் நம்மை வந்து அடையா.

5 ''மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கும் நல்லறிவே''

கடவுளுக்கு வடிவம் இல்லை. வடிவத்தில் கடவுளை வைத்து வழி படுகிறேம். வடிவம் வழிபடுதற்கு ஒரு சாதனம். கடவுள் மெய்ஞ்ஞான வடிவமாகவும், ஒளி வடிவமாகவும் விளங்குவது அதனை நம்மால் அறிய முடியாது. அதனை அறிவதற்கும் துணை வேண்டும். அந்தத்துணையாயிருக்கின்ற மெய்யறிவும் கடவுள். அந்த அறிவினுல் பெறுகின்ற இன்பமும் கடவுள். மெய்யறிவின் துணையால் நிலைத்த இன்பத்தினை அடைவதே மனிதப் பிறவியின் நோக்கம். நாம் அதனைப் பெற முயற்சிக்க வேண்டும்.

6 ''கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற் போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்''

கரும்பினைப் பயிர் செய்கிறேம். சர்க்கரையாகிய பயனை அடைந்ததும் கோதுவாகிய சக்கையினை எறிந்து விடுகிறேம். பசுவினை வளர்ப்பது பாலாகிய பயனையும், நெய்யாகிய சத்தினை

Koviloor Digital Library

யும் அடைவதற்கே. அதுபோல மனிதப்பிறவி வளர்வது, மனிதப் பிறப்பை எடுத்த நாம் வாழ்வது நம்முடைய சிந்தையில் நல்லறிவின் பயனாகிய இன்பத்தினைப் பெறுவதற்கே. நிலைத்த பேரின்பத்தினைப் பெற்றுவிட்டால் கரும்பின் சக்கை கழிக்கப் படுவதுபோல இந்த மனித உடல் பயனற்றதாய்க் கழிந்துவிடும். அந்தப் பேரின்பப் பேற்றினை அடைவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

7 "கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே"

(சிவபுராணம்)

உடம்பில் மெய். வாய், கண், மூக்கு, செவி, என்ற ஐந்து பொறிகளும், அப்பொறிகளால் பற்றப்படுகின்ற சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து புலன்களையும் கொள்ளும் மனமும், அவற்றோடு பிரிக்க முடியாத உயிரும், ஒன்றாக வாழ்கின்றன. உயிர் மனத்தைப்பற்றிப் பொறி வழியாய்ச்சென்று புலன்களை நுகர்ந்து, இன்ப துன்பங்களை அடைகிறது. இப்படியே பலபிறவிகளில் இன்ப துன்ப நிகழ்ச்சி களுக்கு இடமாய வினைகளைச்செய்து மாறிமாறிப் பிறந்திறந்து வருகிறது. எப்போது பொய்யான பொறி புலன்களைவிட்டு மனம் நல்வழிப்பட்டு உள்முகப் பார்வையினால் இறைவனைக் காண முயற்சிக்கிறதோ அப்பொழுது அந்த இன்பப்பெருமானை அனுபவிக்கிறது. அந்தப் பொய்யான நிலையினைமாற்றி மெய்யான இன்பத்தினை அடைவதற்கு நல்லறிவு நல்கும் இறைவன் அந்த உயிரினிடத்திலேயே அறியாமல் கலந்திருக்கிறான். அதனை நாம் அறிதல் வேண்டும்.

8 "வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும்
நூறுநூ றாயிரம் இயல்பின தாகி
ஏறுடை யீசனிப் புவனியை யுய்யக்
கூறுடை மங்கையுந் தானும்வந் தருளி"

கீர்த்தி—23—26.

நிலம் நீர் தீ காற்று விண் என்ற ஐம்பெரும் பூதங் களாய்க் காணப்படும் உலகில் உயிர்களின்தோற்றம் பல்லாயிரம் வடிவினதாகக் காட்சி அளிக்கின்றன. அப் பல்லாயிரம் உயிர்களின் இயல்பும் அவ்வாறே பல்லாயிரம் இயல்பினதாக அமைந்துள்ளன. இங்ஙனம் பலவாறாகக் காணப்படும் உயிர்களி னுடைய தோற்றத்திற்கும் இயல்புக்கும் ஒருகாரணம் வேண்டும்.

Koviloor Digital Library

எந்தப்பொருளும் காரணமின்றி இயங்குவதும் இல்லை. உண்டாக்கப்படுவதும் இல்லை. இந்த உண்மை நாமறிதல் வேண்டும். இந்த உலகத் தோற்றத்திற்கும், உயிர்களின் வளர்ச்சிக்கும் காரணம், இறைவன், அம்மையப்பனுய் ஓருருக்கொண்டு உயிர்கள் வளர்ச்சி பெற்று உய்ய வேண்டும் என்ற கருணைச் செயலால் ஏற்பட்டதேயாகும் என்று நாமுணர வேண்டும்.

9 "எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்
தானே யாகிய தயாபரன் எம்மிறை"
(கீர்த்தி 95—96.)

உலகில் காணப்படும் பல்லாயிரம் வகையான உயிர்களின் தன்மையையும் தன்னிடத்திலே உடையவனுய் அந்த அந்தத் தன்மையில் அந்த அந்த உயிர்களுக்கு உடனுயிருந்து அனுபவிக்கச்செய்து அதனுல் ஏற்படும் இன்ப துன்பங்களால் உயிர்களைப் பக்குவப்படுத்தி வளரச் செய்கிருன் இறைவன். நெருப்பு பொருளோடு சேர்ந்து, அப்பொருளைப் பக்குவப் படுத்துவது போல இறைவன் உயிர்களிற் கலந்து பிரிப்பின்றி உயிர்களைத் தூய்மை செய்கிருன். அவ்வாறு உயிர்க் கலப்பினுல் அவன் தூய்மை செய்வதும், உயிர்களிடத்தில் வைத்த கருணையே ஆகும். அதனுல்தான் கடவுள் அனுபவம் நிறைந்த சான்ருேர்கள் இறைவனை தயாபரன் என்று கூறலாயினர்.

10 "பத்திசெய் யடியரைப் பரம்பரத் துய்ப்பவன்"
(கீர்த்தி 119)

உயிர்கள் உண்மைப்பொருளை உணர்ந்து, அவ்வுண்மைப் பொருளின் உதவியால் இவ்வுடலொடு வாழ்கிருேம் என்று அறிதல் வேண்டும். அங்ஙனம் அறியும்பொழுது உதவி செய்த உயர்ந்த பொருள்னிடத்தில் உயிர்கட்கு ஒரு நன்றி அறிதல் உணர்ச்சி ஏற்படும். அந்தநன்றியறிவுதான் பக்தி என்று பெயர் பெறுகிறது. இந்த உலகத்தையும், உலகத்தில் உடலையும் உடலில் மனத்தையும், மனம் துணை கொண்டு அடைகின்ற போகங்களையும் கொடுத்தவன் இறைவன் என்று அறிகிற அறிவு நல்லறிவாகும். அந்த மெய்யறிவினுல் இறைவனைப் பக்தி செய்து தொழுகின்ற அடியார்களைத் தன்னுடைய மேலான நிலையை அளித்து இறைவன் பாதுகாக்கிருன்.

Koviloor Digital Library

11 "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி"
(திருவண்டப்பகுதி 1—2)

உலகம் என்ற சொல் பறந்த பொருளை உடையது. வான வெளியில் காணப்படும் கோடி கோடி விண்மீன்களும் உலகங்கள்தாம். நுண்ணறிவினர் அவற்றின் அளவுகளை ஓரளவு ஆராய்கின்றனர். பலகோடி அண்டங்களினுடைய தன்மைகளை ஆராய்ந்து பார்த்தால் ஒன்றைவிட ஒன்று பெரியதும் சிறியதுமாய், அறிந்துகொள்ள முடியாத அளவிட முடியாத காட்சியும் பெருமையும் உடையனவாய் விளங்குகின்றன. இந்த அண்டங்களில் வியப்புறும் காட்சி, இவற்றிற்கு முதல்வனாய் இருக்கிற இறைவனுடைய முழுமுதற் தன்மையையும் அளவில் ஆற்றலையும் நமக்கு நினைவு படுத்துகிறது.

12 "முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்னே ரில்லோன் தானே காண்க"
(திருவண்டப் பகுதி 29—30)

ஒரு பொருளை உண்டாக்குகிறவன் அப்பொருள் தோற்றத்திற்கு முன்னே இருக்கிறான். அவனால் செய்யப்பட்ட பொருளில் அவன் செயலும், அவன் அறிவும் கலந்திருக்கின்றன. அச்செயலாற்றலுக்கு அவனே உரியவனாகிறான். அதுபோல இந்த உலகம் செயப்படுபொருள் என்றால், இந்த உலகத்துக்கு முன்னோன் ஒருவன் உண்டு. இந்த உலகத்தில் அவன் செயலும் ஆற்றலும் விளங்குகின்றன. இந்த உலகத்தைப் படைத்த அவனுக்குச் சமமானவர் வேறு ஒருவர் இல்லை; என்று அறிந்து இறைவன் தனக்குவமை இல்லாதான் என்கின்ற தனியறிவினை நாம் பெற்று வாழ வேண்டும்.

13 "பெண்ஆண் அலியெனும் பெற்றியன் காண்க
கண்ணு லியானும் கண்டேன் காண்க"
(திருவண்டப் பகுதி. 57—58)

உயிர்க் கூட்டங்கள் எடுத்த உடலில் மூன்று பிரிவுகளைக் காணலாம். ஒன்று, ஆண் தோற்றம். மற்றொன்று பெண் தோற்றம், இரண்டும் இலதாய அலித்தோற்றம். உயிர்களினிடத்திலும், இவ்வியல்பு உடலுக்கேற்ப அமைந்திருக்கும். இந்த

Koviloor Digital Library

நிலை அனைத்தும் புறத்தில் காணப்படுபவை. உண்மையில் அணுத் தன்மையிலும், இந்நிலை உண்டு அணுவுக்கு அணுவாய் உள்ள இறைத்தன்மையிலும் இந்நிலை உண்டு. அதனைக்காணும், அறிவே மெய்யறிவு, அதனைக்காண மக்களாகிய நம்மால் முடியும். அடைந்த சான்றோர் கண்ணால் யானும் கண்டேன் நீங்களும் காணுங்கள் என்பதனால் நாமறியலாம்.

14 "சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படான்"

(திருவண்டப்பகுதி 111—112)

பெரியதினும் பெரியதுமாய்ச் சிறியதினும் சிறியதுமாய் விளங்கும் ஒரு பொருளை, அனைத்துமாய் விளங்கும் ஒரு பொருளை எச் சொல்லால் சொல்வது. சொன்னால் அச்சொல்லால் சுட்டப்படும் பொருளாய்விடும். ஆகையால் அச்சொல்லின் நிலைகடந்தவனாக இறைவன் ஆகிறான். ஆனால் அந்தப்பொருளை அடைந்து அனுபவிக்கின்ற சான்றோர்கள். அன்பே, அறிவே, இன்பமே என்கிறார்கள். அந்த அளவில் உண்மையே. ஆனால், அவர்களுடைய அனுபவமாகிய அம்மாத்திரத்தில் மாத்திரம் நின்றுவிடுவதன்று அப்பொருள். அதற்கும் அப்பாலாய் நிற்பது. அதனால்தான் அப் பொருளுக்குக் கடவுள் என்று பெயர்.

15 "அளிதரும் ஆக்கை செய்தோள் காண்க
ஊற்றிருந் துள்ளங் களிப்போன் காண்க"

(திருவண்டப்பகுதி 121—122.)

இறை திருவருளால் பெற்ற உடலில் வாழ்கின்ற நாம் அவன் திருவருளால் கிடைத்தது என்றபோதும், அதனைப்பாழ் செய்து வினையிற்பட்டுத் துன்பத்திற்கே, காரணமாக்குகிறோம் என்றபோதும், நமக்கு உண்மை உணர்ச்சியில் இன்பமும், குற்ற உணர்ச்சியில் துன்பமும் உண்டாகும். உண்மையுணர்ச்சியில் உண்டாகும் இன்பமே அவ்விறை அனுபவமாகும். எப்போதும் நாம் அன்புணர்ச்சியினால் கசியும்போது நம்மிடை உள்ளத் துண்டாகும் இன்பமே இறையனுபவம் என்றுணர வேண்டும்.

16 "சாயா அன்பினை நாள்தொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி"

(போற்றி 86—87)

சிற்சில நேரங்களில் மனஞ்சென்ற வழி நாம் சென்று

Koviloor Digital Library

விடுவோம். மக்களே மனத்தின் வழிச் செல்பவர்தாம். ஆனல் இறையன்பை வளர்ப்பவர் இடைவிடாது, தளர்ச்சியின்றி அவன் உபகாரத்தையே நினைந்துருகுவராஞல், அவ்விறைவன், அவர்களைத் தாய்போல் நின்று, ஏன்? தாயாகவே இருந்து வளர்த்துத் தன் அருள் இன்ப வெள்ளத்து ஆழ்த்தி ஆட்கொள்ளுகிருன்.

17 ' மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சயசய போற்றி யென்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டுகொள்ளே
(திருச்சதகம். 1)

இறைவனை இடைவிடாது. அன்பினல் உடம்பெல்லாம் புளகித்துப் பொய்மை யொழிந்து அவனருளைப் போற்றி உனக்கே யடைக்கலம் என்று ஒப்படைத்துவிட வேண்டும். அதுவே நாம் செயற்பாலது.

18 '' நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையரு அன்புக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம் உடையானே ''
(திருச்சதகம் 11)

உலகத்தில் எல்லாருக்குமே. இன்பம் பெற வேண்டும் என்றுதான் எண்ணம். ஆனல் அந்த உண்மை யின்பத்தைப் பெற முயற்சிக்கும்போதுதான் உண்மை யன்பு ஏற்படுவதில்லை. போலியாக. நாடகத்தில் நடிப்பவன் எப்படிப் பார்ப்பவர்கள் மகிழ்ச்சிக்காக நடிக்கிருனே அப்படிப் போலியாக முயற்சிக்கிருர்கள். அதனல் உண்மையின்பம் பெறுவதில்லை. நாம் எப்பொது இறைஇன்பத்தையடைய உண்மை முயற்சியும் அன்பும் கொள்ளுகிருேமோ அப்போது நமக்கு அவ்விறை இன்பம் உண்மையாகவே உண்டாம்.

19 '' வானுகி மண்ணுகி வளியாகி ஒளியாகி
ஊனுகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
சோனுகி யானெனதுஎன்று அவரவரைக் கூத்தாட்டு
வானுகி நின்ருயை யென்சொல்லி வாழ்துவனே ''
(திருச்சதகம் 15)

Koviloor Digital Library

இறைவனை அவன் அருட்காட்சியாகக் காண்பவர்களுக்கு, வானாகவும், மண்ணாகவும், வளியாகவும், ஒளியாகவும் உடம்பாகவும், உயிராகவும் இவற்றிற்கு வேறாகவும், இவற்றின் தலைவனாகவும் காட்சி அளிக்கிறான். அல்லாமலும் ஒவ்வொரு உயிரையும் யான் எனது என்று எண்ணும்படிச் செய்து கூத்தாட்டுகின்றவனாகவும் விளங்குகின்றான். அவனுடைய எல்லையற்ற பெருமையினை உயிர்களாகிய நம்மால் அளந்து அறிய முடியாது.

20 "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றா யாழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே"

(திருச்சதகம் 20)

மனிதனை மனந்தான் ஆட்டிப்படைக்கிறது. ஒருவனுக்கு மனம் வசப்பட்டு விடுமானால், மனதின் வழி ஓடாது, தன்வழி செலுத்தக் கற்றுக் கொள்வானானால் அவன் அனைத்தையும் சாதிக்கலாம். மனத்தின் வழி ஓடுபவன், அம்மனத்தின் இயல்புக்கேற்ப, உய்யும் நெறி அறியாது ஆசையுட்பட்டு அழிகிறான். மனத்தை நிறுத்தி அறிவுவழிச் செலுத்துபவன் நன்னெறியிற் சென்று உய்திபெறுகிறான். அதனால் மனத்தை நிறுத்தும் உபாயத்தை நாம் அறிதல் வேண்டும்.

21 "சிந்தனைநின் றனக்காக்கிநாயி னேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்களார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனை செந்தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே"

(திருச்சதகம்–26)

மனிதன் மனம் மொழிமெய் என்ற மூன்று கருவிகளையுடையவன். அவன், உலகவழி அவற்றை ஓடாது தடுத்து, இறைவனை நினைத்து அவனடிப் புகழைப்போற்றி, சிவத்தொண்டு செய்து பழகி, மாற்றம் பெறுவானானால், அவ்விறைவன் தானே

Koviloor Digital Library

குருவாய் எழுந்தருளி அவனுக்குத் தண்ணருள் செய்து, ஆட்கொண்டு, பேராநந்தப் பெருவாழ் வளிப்பன். அந்நிலைபெற நாம் முயன்று இயன்றவரைப் பெருவாழ்வு பெறத்திருவருள் துணைசெய்ய வேண்டும்.

22 "தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே ய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்கனேற்கே"

(திருச்சதகம்–27)

பிறவி ஒரு பெருங்கடல், கடலில் அலைமாறிமாறி வருவது போல பிறவியும் மாறிமாறி வந்து கொண்டேயிருக்கும். அவ்வலையிடைப்பட்ட துரும்பு வருவதும் போவதும் போல நாம் பிறவியில் வந்து போய்க் கொண்டிருப்போம். கடலிடை யாழத்துச் சுறவுமீன் கடலிடைத் தோன்றும் பொருளை உணவாகக் கொள்வதுபோல், காமமென்ற சுறா மீன் நம்மைக்கவ்வும். அக்காமத்தினின்றும் தப்பிப் பிழைப்பது அரிது அரிது. அச்சுறவினை வென்று காக்கக்கூடிய ஒரே துணை, ஐந்தெழுத்து அரும்பெறல் மந்திரந்தான். எப்போது நாம் திரு ஐந்தெழுத்தினைத் திருந்திய உள்ளத்து, உறுதுணையாக இறுகப் பிடிக்கிறோமோ அப்போதுதான் காமவெகுளி மயக்கங்களினின்றும் பிழைத்து, மலமகன்று, இறைவன் திருவடிப்பேறு என்னும் கரை காணும் நிலைபெற முடியும். ஐந்தெழுத்தினை நெஞ்சத்தழுத்தி உய்தி பெறுவோமாக.

23 "இழித்தன னென்னை யானே யெம்பிரான் போற்றி போற்றி
பழித்திலே னுன்னை யென்னை யாளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடிவ் வாழ்வு போற்றி உம்பர்நாட் டெம்பி ரானே.

(திருச்சதகம் -66)

Koviloor Digital Library

நம்முடைய குற்றங்களை நாமே உணர்ந்து நம்மை நாமே குறையுடையோம் என்று உணர வேண்டும். குறை நீக்கும் ஒருவன் இறைவனே என்றுணர்ந்து அவன் திருவடிப்போதில் மனந் தாழ்த்தி நம் குற்றங்களைக் கூறி அலற வேண்டும். பெரியான் அவன் ஒருவனே. ஆகையால் நம் பிழையனைத்தையும் பொறுத்து, இவ்வவல வாழ்வினின் றும் நீக்கி நம்மையுய்ய ஆட் கொள்ளுவான்.

24 "யானேபொய் என்நெஞ்சும்பொய் என்அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே யமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந்து றுமாறே"

(திருச்சதகம் - 90)

நான் நான் என்று பேசுகிறோமே, அந்த நான் என்ற சொல் எந்தப் பொருளைக் குறிக்கிறது? நமக்கு அந்த நான் என்ற சொல் குறிக்கும் பொருள் தெரியாமலேயே நான் நான் என்று பேசிவருகிறோம். அதனால் நான்என்ற சொல்லால் அறியப் படும் பொருள் இன்னதென் றறியப் படாமையால் நான் என்பது பொய். அதனடியாக வரும் என்நெஞ்சம் என்பதும் பொய்தான் அந்நெஞ்சின் நெகிழ்ச்சியாதிய அன்பும் பொய்தான். இவ்வாறு, இன்னதென் றறியாமலே, நான், என்நெஞ்சம், என் அன்பு என்று பேசுவதெல்லாம் பொய்யாய்ப் போனால், நாம் உய்வதற்கு வழிதான் என்ன? இந்த இழிநிலையில் வாழ்கிறோம் என்று வருந்தி, நீயே எனக்கு வழித்துணை என்று அழுதால், எங்குமாய் உள்ள அவ் விறைவன், நம்மை யாட்கொள்ளுவான், அருளுவான். ஆகையால் நம் இழிவு தெரிந்து அழுது அவனைப்பெற வேண்டும்.

25 "விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்சகப் பெரும்
புலைய னேனையுன் கோயில் வாயிலில்
பிச்ச னாக்கினாய் பெரிய அன்பருக்
குரிய னாக்கினாய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமரம் ஆயினுங் கொலார்
நானும் அங்ஙனே உடைய நாதனே"

(திருச்சதகம் - 96)

Koviloor Digital Library

விண்ணுலக மண்ணுலக முழுமையும் விதை முதலின்றி இச்சை மாத்திரையால் தோன்றச் செய்து சிறிதுகாலம் வைத்து வாங்கிவிடும் விளையாட்டுடையான் இறைவன். அவனருளால் தோன்றிய உலகில் உடலொடுவாழும் நாம் எவ்வளவு கொடிய ராயினும், அவன் தோற்றிய பொருளாகையால் அழிவும் இழிவும் செய்துவிடமாட்டான் என்ற உறுதி நமக்கு வேண்டும். அந்த உறுதியோடு அவனடிச் சார்பைப் பெற்றோமானால் நமக்கு உய்தி உறுதியாக உண்டு.

26 "இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்புஒத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதி கண்டாய்வியன் மூவுலகுக்கு
ஒருதலைவா மன்னும் உத்தரகோச மங்கைக் கரசே
பொருதலை மூவிலை வேல்வலன் ஏந்திப் பொலிபவனே"

(நீத்தல் விண்ணப்பம் 9)

நமக்கு நல்லறிவு தலைப்பட்டு, உலக வாழ்வு பொய் யென்ற எண்ணம் உண்டாயினும், இவ்வுலகின் நாம் மேற் கொண்ட கடமைகள் என்ற பற்று நம்மைவிடாது. அப்போது நன்மையாம் இறைவழியிலும் செல்லமுடியாது கடமையாம் பற்றினையும் விட முடியாது தவிப்பு ஏற்படும். எதுபோல் எனில் இருதலைக் கொள்ளி எறும்பு வெளியில் போக முடியாமலும், உள்ளேயிருந்து வாழமுடியாமலும் தவிப்பது போல, என் செய்வது, துணிந்து துணைபெற வேண்டும், கருணையாளனும் இறைவன் அருளே துணை என்ற உறுதியினால்தான் உய்வுண்டாம். அந்த உறுதி நமக்கு உண்டாவதாக.

27 "தனித்துணை நீநிற்க, யான் தருக்கித்
தலையால் நடந்த
வினைத்துணை யேனை விடுதி கண்டாய்
வினையே னுடைய
மனத்துணையே என் தன்வாழ் முதலே
எனக்கு எய்ப்பில் வைப்பே
தினைத்துணையேனும் பொறேன் துயர்
ஆக்கையின் திண்வலையே.

(நீத்தல் விண்ணப்பம் 39)

மனத்துக்குத் துணையாய், வாழ்வுக்கு முதலாய், தளர்ச்சியைத் தாங்குபவனாய் ஒருவன் இருக்கிறான் என்ற உண்மையை

Koviloor Digital Library

அறியாது நானே தலைவன் என்று வாழ்வதனால்தான் வாழ்வு பாழாய்ப் போய்விடுகிறது. எப்போது ஒரு தனி முதல் உயிருள் கலந்து, நம்மை ஊட்டுவிக்கிறது என்று அறிகிறோமோ. அப்போது அவ்விறைவன் முன் நின்று நம்மை வாழவைக்கிறான் என்று அறிந்து நாம் நல்வாழ்வு பெறவேண்டும்.

28 ஓர் ஒரு கால் எம்பெருமான் என்று என்றே நம்பெருமான்
சீர் ஒரு கால் வாய் ஓவாள் சித்தம் களிகூர,
நீர் ஒரு கால் ஓவா நெடும் தாரை கண்பனிப்பப்,
பார் ஒரு கால் வந்தனையாள், விண்ணோரைத் தான் பணியாள்
பேர் அரையற்கு இங்ஙனே பித்து ஒருவர் ஆம் ஆறும்
ஆர் ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்;
வார் உருவப் பூண் முலையீர், வாய்ஆர நாம் பாடி
ஏர் உருவப் பூம்புனல் பாய்ந்து ஆடுஏல் ஓர் எம்பாவாய்

(திருவெம்பாவை 15)

இறைவனுடைய திருவருட் கலப்பில் ஈடுபட்டவர்கள் எப்பொழுதும். இறை அனுபவத்திலேயே கலந்திருக்கிறார்கள். அவர்களுக்கு, உலகியல் நிகழ்ச்சிகள் ஒன்றும் புலனாவதில்லை. அப்படி அவர்கள் உலகியல் உணர்ச்சி பெறும்பொழுதும், இறைவனுடைய திருப்புகழையே வாயினாற் பேசுகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை நம்முடைய வாழ்க்கைக்கு நேர்மாறானது, அத்தகைய நல்லன்பர்களுடைய கூட்டுறவினால்தான் நமக்கு ஓரளவு உலகப்பற்று குறையும். நற்சார்புண்டு, நல்வழிப் படுவதென்பது இயலாது. ஆகையால் நாம், நல்லன்பர்களின் துணை கொண்டு நன்மை பெற வேண்டும்.

29 "சூடுவேன் பூங்கொன்றைச் சூடி சிவன் திரள்தோள்
கூடுவேன் கூடி, முயங்கி, மயங்கி நின்று,
ஊடுவேன் செவ்வாய்க்கு உருகுவேன் உள்உருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனல்ஏந்தி
ஆடுவான் சேவடியே பாடுதும்காண் அம்மானாய்"

(திருவம்மானை 17)

நாம் இறைவனை உள்ளத்துள் ஆன்ம நாயகனாக உருவகம் செய்து கொண்டு அவனுக்கு விருப்பமான செயல்களைச் செய்து

Koviloor Digital Library

அவனோடு பேசுவது போலவும், அவனோடு கூடி இன்பம் அடைவது போலவும், அவனை கூடுவதற்கு உருகி நிற்பது போலவும், பாவனை செய்து பழகுவோமானால் அப்பழக்கத்தின் மிகுதியால் அவ்விறைவனே நம்முன் வந்து நம்மை ஆட்கொள்வான். இதனை, சோகம் பாவனை என்றும் பாவனாதீதம் என்றும் சான்றோர்கள் சொல்லுவார்கள். பொய்யாய பாவனைகளை விட்டு ஒழித்து உண்மைப் பொருளை அடைவதற்குரிய பாவனை வேண்டும்; இதனைச் செய்து பயன் அடைவோமாக.

30 "வையகம் எல்லாம் உரல்அது ஆக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்எனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன்அணிதில்லை வாணனுக்கே
ஆடபொற் சுண்ணம் இடித்தும்நாமே"

(திருபொற்சுண்ணம் 9)

இவ்வுடம்மை உரலாக, நற்குணங்களாகிய வாசனைத் திரவியங்களைப் பெய்து, உறுதி என்னும் உலக்கை கொண்டு, வாய்மை என்னும் நன்மணம் கமழும்படி இடித்து இறைவனுக்கு அன்பென்னும் நீரோடு கலந்து ஆட்டினால் அவன் ஆனந்தமென்னும் இன்பப்பெருக்கினை நல்கி எளிதாய் அருள் செய்வான் என்பதனை நாம் அறிதல் வேண்டும்.

31 "தினைத்தனை உள்ளதுஓர் பூவினில்தேன் உண்ணாதே,
நினைத்தொறும், காண்தொறும, பேசும்தொறும், எப்போதும்
அனைத்துஎலும்பு உள்நெக, ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்பு உடையானுக்கே சென்று ஊதாய்; கோத்தும்பீ"

(திருக்கோத்தும்பி 3)

உலகத்திலே நாம் மிகச் சிறிய இன்பங்களுக்காக, முயற்சியையும் வலிமையையும் இழக்கிறோம். பின்னால், பெருந் துன்பம் அடைகிறோம். ஆனால் நினைக்கும்பொழுதும், காணும் பொழுதும், எப்பொழுதும் இன்பமே அன்றி துன்பமில்லாத பேரின்பத்தைப் பெறுவதற்கு ஒரு சிறிதும் முயற்ச்சிக்கிறோம்

Koviloor Digital Library

3139

இல்லை. இந்நிலைமாறி உண்மை இன்பத்தை அடைய முயற்சிப் போமானால் பிறவியின் பயன் எளிதில் கைகூடும்.

32 "ஒன்றுஆய், முளைத்துஎழுந்து எத்தனையோ கவடுவிட்டு
நன்றுஆக வைத்துஎன்னை நாய்சிவிகை ஏற்றுவித்த
என்தாதை; தாதைக்கும், எம்அனைக்கும் தம்பெருமான்
குன்றாத செல்வற்கே சென்றுஊதாய் கோத்தும்பீ!"
(திருக்கோத்தும்பி 8)

ஒருவிதை முளைத்தெழுந்து கிளைத்துப் பூத்துக் காய்த்துப் பன்னூறு விதைகளைக் கொடுக்கின்றன. அப்பன்னூறு விதைகளும் அவ்வாறே, ஒவ்வொன்றும் பன்னூறாய்ப் பல்லாயிரமாய்ப் பல்கோடியாய், நாடெங்கும் உலகெங்கும் பரவுகின்றன. அம்முதல் விதையின் பிரிவே அப்பல்கோடி விளைவுகளும் என்பதனை நாமறிகிறோம். அப்படியே மனிதனும், பரவியுள்ளான். அம் மனிதனுக்கு முதலாய் இருந்தவன் இருக்கிறவன் இருப்பவன் எவனோ, அவனே. நமக்கும் முதல்வன். இந்த உண்மை யறிவு வந்தால், அம் முதல் மனிதனைத் தோற்றிய இறைவன் நம்மை ஆட்கொள்வான்.

33 "கள்வன் கடியன் கலதியிவன் என்னாதே
வள்ளல வரவர வந்தொழிந்தான் என்மனத்தே
உள்ளத்து உறுதுயர் ஒன்றொழியா வண்ணம் எல்லாம்,
தெள்ளும் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ!"
(திருக்கோத்தும்பி 19)

இறையனுபவம் என்பது திடீரென வந்து குதிப்பது அன்று, நாம் எந்த அளவுக்கு நம் குற்றங்களைக் குறைத்துக் கொண்டு வருகிறோமோ அந்த அளவுக்கு நாம் தூய்மையடைகிறோம். நாம் எந்த அளவுக்கு இறைவனிடம் அன்பு செலுத்துகிறோமோ அந்த அளவுக்கு இறைவன் நமக்கு அருள்செய்கிறான். எப்போதும் இறைவனிடமே உள்ளம் பதிந்துவிட்டால், துன்பமே எப்போதும் இலதாய்ப் போய்விடும்.

34 "கயல்மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக்கலந் தாண்டலுமே
அயல்மாண்டு அருவினைச் சுற்றமும் மாண்டு அவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகமாண்டு என்னுடைய
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ"
(திருத்தெள்ளேணம் 11)

Koviloor Digital Library

இறைவன் நம்மை யடிமை கொண்டான் என்பதனை யறிவதெப்படி? உலகம் என்ற எண்ணமும், உலகத்தில் சுற்றம் என்ற நினைவும், இவர் உற்றார் பெற்றார், ஆண் பெண் என்ற வேறுபட்ட நினைவும், நாம் உணர்கிறோம், உடுக்கிறோம் வாழ் கிறோம். என்ற சிந்தனையும் இல்லாத நிலை உண்டாயபோது, உண்டாகும் நிலையில் அவனருள் நம்மிடம் முழுதும் நிலைத்து விடுகிறது என்பதனை அறியலாம்,

35 "தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ"

(திருச்சாழல் 9)

எல்லாமாய் அல்லதுமாய் உள்ள இறைவன் பெண்ணொரு பாகனாய் வழிபடப் பெறுவானேன் என்றவினு பலசமயத்தவர்க்கு ஒரு ஐயப்பாடாய் இருக்கிறது. இறைவன் உலகில், காணும் உயிர்கட்கு இன்ப வேட்கையை உண்டாக்க, ஆணும் பெண்ணு மாய் அமைத்து இயல்பாகவே வேட்கையை உண்டாக்கி, வளரச் செய்து, உவர்ப்பினை உண்டாக்கி, தன்னையடையச் செய்கிறான். அங்ஙனம் உள்ள இறைவன் உயிர்களிடம் உயிர்க்குயிராயும் உள்ளான் ஆகையால், அவனும் ஆணும் பெண்ணுமாய்க் காட்சி யளித்து, அவ்வுயிரினங்கட்கு, உள்ளுறையும் அவன் என்பதை யும் விளக்கிக் கொண்டிருக்கிறான்.

36 'அன்றால நீழற்கீழ் அருமறைகள் தானருளி
நன்றாக வானவர் மாமுனிவர் நாடோறும்
நின்றார ஏத்தும் நிறைகழலோன் புனைகொன்றைப்
பொன்றுது பாடிநாம் பூவல்லி கொய்யாமோ"

(திருப்பூவல்லி 13)

இறைவன் ஆலின்கீழ் இருந்து அறமுதல் நாற்பொருளை முனிவர் நால்வர்க்கு அருள்செய்தான் என்பது, உலக வாழ்வில் உயிர்கள் எவ்வாறு வாழ்ந்து வளர்ந்து அருள் பெற வேண்டும் என்ற விதிமுறையை வகுத்தவாறும். அவ் விதிமுறைப்படி வாழாமையால் வாழமுடியாமையால், தாழ்கின்றன. நன்மைபெற வகுத்த வழியே அறமெனப்பட்டது. அதனை இறைவனே உயிர் களின் பொருட்டு பக்குவப்பட்ட ஆன்மாக்களாய முனிபுங்க

Koviloor Digital Library

வர்கட்கு உணர்த்தியருளினன். இதனை வள்ளுவர்கூட 'பொய்தீர் ஒழுக்க நெறி' என்று கூறினர், அதன் வழி வழி நின்று நாம் உய்திபெற வேண்டும்.

37 "நிலம்நீர் நெருப்புஉயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனுய மைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகேழெனத் திசைபத்தெனத் தானொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ"

(திருத்தோணோக்கம் 5)

உலகில் நாம் காண்கின்ற பொருள்கள் நிலம், நீர், தீ, காற்று, விண், நிலா, பகலவன் என்ற ஏழும் உயிரும் ஆகிய எட்டுப் பொருள்களாகவே உள்ளன. அவையனைத்தும் இறைவனுடைய திருமேனி. இதனை அட்டமூர்த்தி என்பர். மூர்த்தி வடிவம். எட்டு வடிவம் இறைவனுக்கு. இவ்வெட்டன்றி உலகில் காணப்படும் பொருள் வேறில்லை. ஆகையால் அவையனைத்திலும் இறைவன் கலந்துள்ளான் என்பதையறிந்து அனைத்துப் பொருளும் ஆண்டவன் உறைவிடம் என்பதனை யுணர்ந்து பலவாய்க் காணப்படினும், ஒன்றே யாம் என்ற ஒன்றெனக் காணும் காட்சி வேண்டும். ஒன்றாகக் காணும் காட்சியே இறைக்காட்சி.

38 "ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலம் எல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந்து என்பிறவித்
தாழைப் பறித்தவா தோணோக்கம் ஆடாமோ"

(திருத்தோணோக்கம் 13)

நாம் அறியாமையால், எண்ணற்ற பிறவிகளில் முயற்சியும் செயலும் உடையவர்களாய் வாழ்கிறோம். ஆனால் அம்முயற்சியும் செயலும் பயனற்ற மேலும் பிறவிக்குரிய துன்பவினைவின் செயலையே செய்து நாம் அழிகிறோம். எப்போது, பிறவாப் பயனளிக்கும், இறைபணி நிற்கிறோமோ அப்போதுதான் நம் பிறவி பாழ்போகாது வாழ்வளிப்பதாக அமையும். அந்நிலையில் இறைபணி நின்று முத்தி எனும் பயனளிக்கும் நல் வாழ்வாக மாற்றிக் கொள்வோமாக.

Koviloor Digital Library

39 "தையல் ஓர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரால் அன்னே என்னும்
ஐயம் புகுந்து அவர் போதலும் என்உள்ளம்
நையும்; இதுஎன்னே! அன்னே! என்னும்"

(அன்னைப்பத்து 9)

எப்பொழுது இறைவனுடைய திருக்கோலத்தை மனத்தால் நினைத்து வாயால் புகழ்ந்து தலையால் கும்பிடுகிற நிலை வருகிறதோ, அப்பொழுது மனம் கரைந்து அன்பு நெக்கு விட்டு அகம் குழைந்து இன்பநிலை உண்டாகும்.

40 "கொந்து அணவும் பொழில் சோலைக்கூம் குயிலே! இதுகேள்நீ
அந்தணன் ஆகிவந்து இங்கே அழகிய சேவடி காட்டி
'எம்தமர் ஆம் இவன்' என்று இங்கு, என்னையும் ஆட்கொண்டருளும்
செம்தழல்போல் திருமேனித் தேவர்பிரான் வரக்கூவாய்"

(குயிற்பத்து 10)

இறைவன் குருவடிவினனாய் எழுந்தருளி, அடியார்களுக்கு நடுவே அன்பினால் கசிந்துருகும் பக்குவப்பட்ட உயிர்களை ஆட்கொள்ளுவதற்காக உபதேசம் செய்து இவன் நம்மை அடைவதற்குரிய தகுதி உடையவன் என்று பலர் அறியச்செய்து ஆட்கொள்ளுகிறான். அதற்கு நாம் பக்குவப் பட்டவர்களாக ஆகிறோம்.

41 "பப்பு அறவீட்டு இருந்து உணரும் நின் அடியார்,
பந்தனை வந்து அறுத்தார் அவர் பலரும்
மைப்பு உறுகண்ணியர் மானிடத்து இயல்பின்
வணங்குகின்றார் அணங்கின் மணவாளா!
செப்பு உறுகமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந்துறை உறைசிவ பெருமானே!
இப்பிறப்பு அறுத்து எமைஆண்டு அருள்புரியும்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே!"

(திருப்பள்ளியெழுச்சி 6)

Koviloor Digital Library

உலகியலில் பரந்து ஓடும் எண்ணங்களை ஒடுக்கி ஒருமுகப் பட்ட சான்றோர்கள் இறைவனை அம்மை அப்பனாக மனத்துக் கொண்டு மனிதத்தன்மைக்கு ஏற்ப வழிபடுகிறார்கள். இறைவன் ஆறொருவர் உள்குவார் உள்ளத்து உள்ளே அவ்வுருவாய்க் காட்சி அளிக்கும் இயல்பினன் ஆதலால் அவ்வாறே அவர்களுக்கு அருள் செய்கிறான். நாம் அவ்வாறே அம்மை அப்பனாய் வழிபாடு செய்து பிறவிஎன்னும் பெருந்துன்பக் கடலினின்றும் கரையேற முயற்சிக்க வேண்டும்.

42 "நல்காது ஒழியான் நமக்குஎன்றுஉன்
நாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறு
வணங்கா, மனத்தால் நினைந்துஉருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப்
பரவிப் பொன்னம்பலம் என்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கு இரங்கி
அருளாய் என்னை உடையானே!"

(கோயில் மூத்த திருப்பதிகம் 10)

மனிதனுக்கு நம்பிக்கை வேண்டும். நம்பிக்கையின் அடிப் படையில் தான் வாழ்வு மலர்கிறது. பொய்யான வாழ்க்கை யில் நம்பிக்கையில்லாது. நிலைத்த மெய்யான வாழ்வில் நம்பிக்கை வேண்டும். அந்த உண்மை வாழ்வைப் பெறுவதற்கு இடையறாது உழைப்பும் உறுதியும் வேண்டும். இறைவனுடைய திருவடிப் பேற்றை அடைவதற்கு கூத்தப்பிரானின் குஞ்சிதபாதத்தை நினைந்து அதனையே பாவித்து அடைந்துவிடலாம் என்ற நம்பிக்கையோடு, தளர்ந்து அடைக்கலமாக அவனிடத்தில் ஒப்படைத்து விட்டால் அவன் அருள் செய்வான், இது உண்மை.

43 "இன்றுஎனக்கு அருளி இருள்கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்புஅற நினைந்தேன்
நீஅலால் பிறிதுமற்று இன்மை
சென்றுசென்று அணுவாய்த் தேய்ந்துதேய்ந்து ஒன்றுஆம்
திருப்பெருந் துறைஉறை சிவனே
ஒன்றும்நீ அல்லை அன்றிஒன்று இல்லை
யார்உன்னை அறியகிற் பாரே

(கோயில் திருப்பதிகம்–7)

Koviloor Digital Library

உலகில் ஒளியுடைப்பொருள்களை மூன்றென்பர். விளக்கு, சுடர், சோதி என்பன. அவற்றுள் விளக்கு அகல், எண்ணெய், திரி, நெருப்பு என்ற தொடர்பால் ஒளியுடையதாய் விளங்குவது சுடர் என்பது சூரியன், சந்திரன் என்பன, அவை தாமே ஒளியுடையதாய் இருப்பன. ஆயினும் அவ்வொளிக்குப் பற்றுக் கோடுஆய, மண்டிலம் உண்டு. சூரிய மண்டிலமும், சந்திர மண்டிலமும் இடயை நிற்க, ஒளி வெளிவருகிறது. சோதி என்பது, பற்றுக்கோடின்றி, ஒளியேயாய் விளங்குவது. இறைவன், இந்த மூன்று நிலையிலும், உளன், அவன் தனிநிலை, சோதியாய் அமைவது, இறைவனுடைய அனுபவம் பெற்ற ஆன்றோர்கட்கு இறைவன் ஞாயிறுபோன்று, ஆன்மாவை இடமாகக் கொண்டு ஒளியாய்த் தோன்றுவான், மலங்களால் கட்டுண்ட உயிர்களிடத்து விளக்குப்போல, உள்ளுணர்வில் மறைந்து நின்று, தூண்டும்போது வெளிப்படுவான். நாம் பின்னிலையில் நிற்கிறோம். எப்போது, மலங்களின் நின்றுவிடுபடுகிறோமோ அப்போது இறைவன் நம்மான்மாவையே இடமாகக் கொண்டு ஞாயிறு போன்று விளங்குவான். அந்நிலையில், அறியாமை என்ற இருட்டு தானே விலகும். அனைத்தையும் பிரித்துணரும் அறிவும், ஒன்றாய்க் காணும் அறிவும் தானே விளங்கும். அவனன்றி ஒரு பொருளும் இல்லை என்பதும், அவனே எல்லாமாய் உள்ளான் என்பதும், அவனென்று ஒரு பொருள் இல்லை என்பதும் அனுபவத்தில் அறிந்து ஆனந்த பரவசமடைவான். அந்தப் பரஒளியில்தான் கரைந்து போவதையும், தானென்று ஒரு பொருள் இல்லை என்பதையும் அனுபவிப்பான். அப்போது அவன், அந்த அரும் பெருஞ் சோதியாம் பேரொளியில் கலந்து பேரானந்தப் பெருவாழ்வைத் துய்க்கும் பெரும் பேறடைவான், என்பதை நாமறிதல் நன்று.

44 "எண்ணிலேன் திருநாமம் அஞ்செழுத்தும் என்ஏழைமையதனாலே
நண்ணிலேன் கலைஞானிகள் தம்மொடும் நல்வினை நயவாதே
மண்ணிலே பிறந்திறந்து மண்ணாவதற்கு ஒருப்படுகின்றேனை
அண்ணல் ஆண்டுதன் அடியாரிற்கூட்டிய அதிசயம் கண்டாமே"

(அதிசயபத்து -6)

நாம் இறைவன் திருவடியைப் பெறுதற்குத்துணை, ஐந்தெழுத்தும் அடியார் கூட்டமும், அறச்செயலும், ஆ்பமூன்றும்.

Koviloor Digital Library

வருந்தி வந்தவர்க்கு ஈதலும், பற்றற்ற நல்ல துறவுள்ளம் உடையார்கள் கூட்டுறவும், எப்போதும் மனத்துணையாக ஐந்தெழுத்து மந்திரமும், நம்வாழ்வில் மாற்றத்தை உண்டாக்கித் தனித்துணையாம் இறைவனடிச் சார்பை உண்டாக்கிவிடும். அதனை உலகவர்கண்டு வியப்பார்கள். நமக்கேகூட ஒருவியப்பினை உண்டாக்கும். ஆனல், அம் மூன்றையும் உறுதுணையாக நாம் பிடிக்கும் உறுதியைப் பொறுத்தே பேறு இருக்கிறது.

45 "தாதாய் மூவே ழுலகுக்கும் தாயே நாயேன் தனையாண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே பெருந்தேன் பில்க
எப்போதும்
ஏதா மணியே என்றென் றேத்தி இரவும் பகலும் எழிலார்பாதப்
போதாய்ந் தணைவது என்று கொல்லோஎன் போல்லா
மணியைப் புணர்ந்தே"
(புணர்ச்சிப்பத்து—9)

இறைவன் மூவே ழுலகுக்கும் முதல்வனுயிருக்கிருன். அவனே அனைத்துயிர்க்கும் அம்மையப்பனுகவும் உள்ளான். அப்பெருமானே. உயிர்களின் பிறவித்துன்பம் நீக்கும் பெருமருந்தாயும் உள்ளான், அவனே அருள் செய்தாலன்றி உயிர்கள் தம் சிற்றறிவால் அவனையறியும் அறிவுடையன அல்ல, என்ற உண்மையை அறிந்து, 'ஏ கடவுளே என் எளிமைகண்டு என்னை நீயே கருணையால் காப்பாற்ற வேண்டும்' என்று இரவும் பகலும் எப்போதும் அவனடியே சிந்தித்தரற்றும் நிலைபெற்ருல் அவனடி ஞானம் பெற்றுய்யலாம்.

46 "துப்பனே தூயாய் தூயவெண் ணீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்து
ஒப்பனே உன்னை உள்குவார் மனத்தின்
உறுசுவை யளிக்கும் ஆரமுதே
செப்பமா மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்த மேவியசீர்
அப்பனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே"
(அருட்பத்து—6)

Koviloor Digital Library

இறைவனே தன்னேரில்லாத் தானே ஒருவனுய முதல்வன், இறைவனே இயல்பாகவே தூய்மை யானவன், இறைவனே, பற்றுக்கோடின்றி விளங்கும் சோதியாம் பெருஒளியானவன் அவனைத்தூய மனத்தோடு நினைந்துருகும் அடியார் உள்ளத்தில் முன்னறியாத பெருஞ்சுவைப் பேரமுதாய் இனிப்பான். அவனை அவ்வாறு நினைந்து நினைந்து கசிந்து கசிந்து உருகி உருகிப் பரிந்து அழைத்தால் அவர்கட்கு முன்னே எழுந்தருளி, என்ன வேண்டும் என்று அறிந்து அவனே அருள் செய்வான்.

47 "பிணக்கு இலாத பெருந்துறைப் பெருமான்
உன் நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கு இலாதது ஓர்இன்பமே வரும்
துன்பமே துடைத்து எம்பிரான்
உணக்கு இலாதது ஓர்வித்து மேல்
விளையாமல் என்வினை ஒத்தபின்
கணக்கு இலாத் திருக்கோலம் நீவந்து
காட்டினுய், கழுக் குன்றிலே"

(திருக்கழுக்குன்றப் பதிகம்—1)

உயிர்கள் வினைவசத்தால் பிறந்தும்இறந்தும் வருகின்றன. வினைகள் நல்வினை தீவினைஎன இருவகைப்படும். நல்வினையால் இன்பமும், தீவினையால் துன்பமும் விளையும். இருவினைகளும் பிறப்பிறப்புக்குக் காரணம். இருவினைகளையும் செய்யாது ஒழிவதற்கு மனம் ஒருமைப்பட வேண்டும். பொறிபுலன்களை அடக்கினுலன்றி மனம்ஒருமைப்படாது பொறிபுலன்கள் ஒடுங்கி மனம் ஒருமைப்பபட்டு நின்ற பொழுது இருவினை ஒப்பும், மலபரி பாகமும் வருகிறது. அப்பொழுது இறைவனுடைய திருவருள் வந்து பதிகிறது. திருவருட்பதிவு இறைவன் குருவாய் எழுந்தருளி அருள் செய்கிருன். அங்கே அடைவது இன்பமே அன்றி துன்பமில்லை. இதனை ஆத்மானுபவம் என்பார்கள்.

48 "இன்பம் பெருக்கி இருள்அகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வு அறுத்துச் சோதிஆய் அன்புஅமைத்துச்
சீர்ஆர் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊர்ஆகக் கொண்டான் உவந்து."

(திருவெண்பா 11)

Koviloor Digital Library

இறை அனுபவம் என்பது எங்கிருந்தோ வருவது, பெறுவது என்பது இல்லை. எப்படி மகிழ்ச்சியும் துன்பமும் உள்ளத்து உணர்ச்சியில் உண்டாகின்றனவோ அப்படியே உள்ளத்து உணர்சியில் உண்டாகும் ஒரு உண்மை வெளிப்பாடே இறையனுபவம். இருண்டுகிடக்கும் உலகம் ஞாயிறு தோற்றத்தினால் அனைத்துப் பொருளும் விளங்கி ஒளி பெறுமாப்போலே, அறியாமை நீங்கி இன்ப ஒளியில் அனைத்துமாய் விளங்கும் பெறு நிலையே இறை அனுபவம் என்பது, அதனை பக்குவப்பட்ட ஞானிகள் தம் சிந்தையாகிய, உள்ளுணர்ச்சியில் அனுபவிக்கிறார்கள். அந்த அனுபவம் எல்லாரும் பெறவேண்டும். யார்க்கும் பொது பதிபாக நிலைதான் வேண்டும்.

49 "சீலம் இன்றி நோன்புஇன்றிச்
செறிவே இன்றி அறிவுஇன்றித்
தோலின் பாவைக் கூத்தாடஆய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலும் காட்டி வழிகாட்டி
வாரா உலக நெறிஏறக்
கோலம் காட்டி ஆண்டானைக்
கொடியேன் என்றோ கூடுவதே?"

(ஆனந்த மாலை—3)

ஒப்பற்ற ஒரு பொருளை அடைவதற்கு உரியவழியிற் செல்ல வேண்டும். அதற்குரிய முயற்சி வேண்டும். அதனை அடைய வேண்டும் என்ற ஆர்வம் வேண்டும். அப்பொருளை அடைவதற்குரிய உபாயங்களை அறியவேண்டும். இந் நால்வகை நிலையிலும் குறையில்லாதபொழுது அப் பொருளைப் பெறலாம். இஃது உலகியல். உண்மை இயலாகிய இறை வழியிலும் ஒழுக்கம், தவம், ஆர்வம், அறிவு என்ற நான்கும் படிப்படியாக வளரும் பொழுது ஆத்மா இறையை அடைவதற்குரிய தகுதி உடையதாக ஆகிறது, அங்ஙனம், முயலாத வாழ்வு தோற்பாவைக் கூத்தாட்டுப்போல் முடிகிறது. தோல் பாவையில் உயிரில்லை, ஆகையால் ஆட்டுவான் வழி ஆடுகிறது. அதுபோல நாமும் மனத்தின் வழி ஆடுவோமானால், இருவினைச் சூழலில் பட்டு அழிந்து போகிறோம். நம் வழி மனத்தை மாற்றும்பொழுது நன்மை அடைகிறோம். இறை அனுபவம் உண்டாகிறது.

Koviloor Digital Library

50 ''செம்மைநலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
முமமைமலம் அறுவித்து முதல்ஆய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருள்ஆக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மைஎனக்கு அருளியஆறு ஆர்பெறுவார் அச்சோவே!''

(அச்சோப் பதிகம்—9)

நாம் எதனைப் பெற வேண்டும் என்றும், எது உயர்ந்த இன்பம் என்றும் அறியாது வல்வினைப் பட்டுத் துன்பப்பிறப்பில் வாழ்கிறோம். எப்போது உண்மையான உயர்ந்த இன்ப வேட்கை உண்டாகிறதோ அப்போது இந்த அவல வாழ்க்கையின் இழிநிலை புலப்படும். உயர் நிலையைப் பெறுவதற்கு முயற்சி வேண்டும். தாழ்வுகளின்றும் விலக்கு ஏற்படும். தாழ்வுகள் மூன்று. அறியாமை, இருவினைச் செயல், இன்பதுன்பக் கூட்டுறவின் வாழ்வு; இந்த மூன்றையும் மும்மலம் என்பது, இந்த மும்மல விலக்கு நமக்கு ஏற்படுவதற்கு, இறைவனுடைய திருவருளைக் குருவருளால் பெற வேண்டும். அந்த உயர்ந்த நிலை கிடைக்கப் பெறுவதுதான் மனித வாழ்வின் குறிக்கோள். அதனைப் பெறுவது ஓர் அதிசயமும் ஆகும். எல்லையற்ற இன்ப வாழ்வு நம் அனைவர்க்கும் கிடைப்பதாக.

முற்றும்



Koviloor Digital Library



திருச்சிற்றம்பலம்.

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவு மினியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

Koviloor Digital Library

மணிவாசக மன்றம்,

அரியலூர்.

மன்றத்தில் கிடைக்கும் நூல்கள் :-

1. சீவக நம்பி
   (திரு. அ. மு. சரவண முதலியார்) ரு. 1—00
2. கட்டுரைப் பொழில் (,,) ரு 2—50
3. அமுது அடியடைந்த
   அன்பர். ராப்பர் (,,) ரு. 1—25
   அட்டை (,,) ரு. 1—50
4. திருவரத்துறைத் தலவரலாறு
   (திரு. க. முருகேச முதலியார்) ரு. 0—31
5. விநயாகர் மாண்பு (,,) ரு. 0—31

அஞ்சற்செலவு பிரத்தியேகம்.

செயலாளர்,
மணிவாசக மன்றம்,
வேளாளத்தெரு, அரியலூர். S. R.
திருச்சி மாவட்டம்.

ஜனோபகார (மின்) அச்சகம், அரியலூர்.